2025 அக்டோபர் மாதம் 15 – ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 41/2021

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 – ஆம் தேதி புதன்கிழமை திருமதி.C.லதா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – அழகேஸ்வரி |
| கணவர் பெயர்: | பாலசுப்பிரமணியன் |
| ஊர்: | போடிநாயக்கனூர் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கிராம நிர்வாக அலுவலர் |
| வயது : | 52 |

15.10.2025

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது பணியாளர் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம் டொம்புச்சேரி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.10.2019 ம் தேதி போடிநாயக்கனூர் நகர் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றினேன். அன்றைய தினம் மாலை 5.30 மணியளவில் எனது அலுவலகத்தில் நானும், எனது உதவியாளர் சாந்தகுமாரி என்பவரும் இருந்தோம். அப்போது போடிநாயக்கனூர் நகர் காவல் ஆய்வாளர் எங்களுக்கு தகவல் கொடுத்தார். ஒரு வழக்கு சம்பந்தமாக கைது செய்ய வேண்டியுள்ளது. அதனால் வருமாறு கோரினார். நானும், எனது உதவியாளரும் போடிநாயக்கனூர் பரமசிவம் கோவில் பின்புறம் உள்ள சம்பவ இடத்திற்கு சென்றோம். நாங்கள்

அங்கே சென்ற போது அந்த இடத்தில் போடிநாயக்கனூர் நகர் காவல் ஆய்வாளர் மற்றும் காவல்துறை அதிகாரிகள் இரண்டு நபர்கள் இருந்தார்கள் மற்றும் ஆஜர் எதிரிகளில் அருண்பாண்டியன், அஜித்குமார், மணிகண்டன் ஆகியோர்கள் இருந்தார்கள். காவல் ஆய்வாளர் மேற்படி எதிரிகளை கைது செய்து, விசாரித்தப்போது, மாலை 6.15 மணியளவில் அருண்பாண்டியன் என்பவர் தானாக முன்வந்து எவ்வித அச்சுறுத்தலும் இன்றி தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 09.10.2019 ம் தேதி இரவு 9.00 மணிக்கு போடிநாயக்கனூர் ஆரா தியேட்டரில் படம் பார்ப்பதற்காக தாங்கள் மூன்று பேரும் போடிநாயக்கனூர், கட்டப்பொம்மன் சிலைக்கு பின்புறம் குமார் (எ) வீரக்குமாரின் ஒர்க்ஷாப்பில் வண்டியை நிறுத்திவிட்டு படம் பார்க்கச் சென்றோம். படம் பார்த்துவிட்டு திரும்பிவந்து பார்த்தப்போது அந்த இடத்தில் வண்டி இல்லை. அதன்பிறகு அந்த ஒர்க்ஷாப் உரிமையாளருக்கு போன் செய்து தாங்கள் நிறுத்தியிருந்த வண்டியை காணவில்லை என்று சொன்னதாகவும், அந்த பைக்கில் பெட்ரோல் குறைவாக இருப்பதாகவும், அவர்கள் வெகுதொலைவிற்கு சென்றிருக்க முடியாது, நாம் போய் பார்க்கலாம் என்று சொன்னதாகவும், போடிமெட்டு ரோட்டில் சென்று தேடிப்பார்த்ததாகவும், போடிநாயக்கனூர் முந்தல், ஏ.டி.காலனிக்கு செல்லும் ஒத்தையடி பாதையில் பாபு என்பவர் வண்டியை சாய்த்தவாறு வைத்துக்கொண்டு நின்றுக்கொண்டிருந்திருக்கிறார் என்றும், வண்டி அந்த வண்டித்தான் என்று அஜித்குமாரும், மணிகண்டனும் பார்த்துவிட்டு, தகவல் தெரிந்து சம்பவ இடத்திற்கு வருமாறு அருண்பாண்டியனை அழைத்தார்கள். ஏன் எங்கள் பைக்கை திருடினாய் என்று கேட்டு, கையாலும், குச்சியாலும் பாபு என்ற நபரை அடித்ததாகவும், திரும்பவும் அருண்பாண்டியன் அங்கு வந்து, அங்கிருந்த புங்கை மரத்தின் குச்சிகளை பிடிங்கி குச்சியாலும், கையாலும் மாறி மாறி அந்த நபரை அடித்ததாகவும், அவ்வாறு அடித்ததில் அந்த நபர்

மயங்கிவிழுந்துவிட்டதாகவும், பின்னர் அந்த பைக்கில் அஜித்குமார் முன்னால் அமர்ந்துக்கொண்டு, அவருக்கு பின்னால் மயங்கி விழுந்த நபரை அமர வைத்து, அதற்கும் பின்னால் மணிகண்டன் அமர்ந்து கொண்டு போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்ததாகவும், இடையில் வரும் வழியில் குரங்கனி ரோட்டில் இருக்கும் ஆண்டி ஓடையில் புங்கை மரத்தின் குச்சிகளை வீசிவிட்டு, அரசு மருத்துவமனைக்கு சென்றப்போது, மருத்துவர் அந்த மயங்கி விழுந்த நபரை பரிசோதித்துவிட்டு, அவர் உயிருடன் இல்லை என்று தெரிவித்துவிட்டதாகவும், அதன்பிறகு விசயம் தெரிந்து கேரளாவிற்கு தப்பித்து ஓடிவிடுவோம் என்று முடிவு செய்து, போடிநாயக்கனூர் பரமசிவம் கோவில் பின்புறம் இருந்தபோது, பிடித்துவிட்டதாகவும் வாக்குமூலம் அளித்தார். மேலும் அவர் தன்னை அழைத்துச்சென்றால் சம்பவத்தின்போது தான் பயன்படுத்திய அப்பாச்சி இருச்சக்கர வாகனம் மற்றும் CBZ இருச்சக்கர வாகனம் ஆகிய இரண்டு பைக்குகளையும் எடுத்து ஆஜர்படுத்துகிறேன் என்றும், ஆண்டி ஓடையில் வீசிய புங்கை மர குச்சிகளை எடுத்து ஆஜர்படுத்துவதாகவும் கூறினார். மேற்படி அருண்பாண்டியன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை அவர் சொல்ல சொல்ல காவல் ஆய்வாளர் மடிக்கணினியில் தட்டச்சு செய்தார். அந்த இடத்தில் இருந்த இரண்டு காவல்துறை அதிகாரிகளும் மடிக்கணினியை பெற்றுக்கொண்டு வெளியே சென்று அருண்பாண்டியன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பிரிண்ட் அவுட் எடுத்துக்கொண்டு வந்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அருண்பாண்டியன் என்பவரிடம் முதலில் கையொப்பம் வாங்கினார்கள், அதன்பிறகு அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளாக நானும், எனது உதவியாளரான சாந்தகுமாரி என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அருண்பாண்டியன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.1**–ஆக குறியீடு செய்யப்படுகிறது. அருண்பாண்டியன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்

அடிப்படையில் அவர் சொன்ன இருச்சக்கர வாகனங்களை கைப்பற்றுவதற்காக போடிநாயக்கனூர் பரமசிவம் கோவிலுக்கு பின்புறம் இரவு 8.00 மணியளவில் நான், போடிநாயக்கனூர் நகர் காவல் ஆய்வாளர், இரண்டு காவல்துறை அதிகாரிகள் மற்றும் எனது உதவியாளர் ஆகியோர் சென்றப்போது, பரமசிவன் கோவிலுக்கு பின்புறம் இருந்த TN 60 F 4702 என்ற TVS அப்பாச்சி இருச்சக்கர வாகனம்–1 மற்றும் TN 60 U 8124 என்ற CBZ இருச்சக்கர வாகனம் –1 ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியில் சாட்சிகளாக நான், எனது உதவியாளரும், ஆஜர் எதிரிகளில் அருண்பாண்டியன், அஜித்குமார், மணிகண்டன் ஆகிய மூன்று பேரும் கையொப்பம் செய்தோம். நாங்கள் சாட்சி கையொப்பங்கள் போட்டப்பின்னால் காவல் ஆய்வாளரும் அத்தாட்சியில் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் இருச்சக்கர வாகனங்களை கைப்பற்றியதற்கான அத்தாட்சி **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பிறகு இரவு 9.00 மணியளவில் போடிநாயக்கனூர் நகர் காவல் ஆய்வாளர், இரண்டு காவல்துறை அதிகாரிகள், நான், எனது உதவியாளர் மற்றும் அருண்பாண்டியன், அஜித்குமார், மணிகண்டன் ஆகிய மூன்று எதிரிகளுடன் சேர்ந்து ஆண்டி ஓடைக்கு சென்றோம். அங்கு கிடந்த புங்கை மரக் குச்சிகளை மேற்படி மூன்று எதிரிகளும் அடையாளம் காட்டியதை காவல் ஆய்வாளர் அவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் சாட்சிகளாக நான், எனது உதவியாளரும், ஆஜர் எதிரிகளில் அருண்பாண்டியன், அஜித்குமார், மணிகண்டன் ஆகிய மூன்று பேரும் கையொப்பம் செய்தோம். நாங்கள் சாட்சி கையொப்பங்கள் போட்டப்பின்னால் காவல் ஆய்வாளரும் அத்தாட்சியில் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் புங்கை மரக்குச்சிகளை கைப்பற்றியதற்கான அத்தாட்சி **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பிறகு நாங்கள் எங்கள் அலுவலகத்திற்கு சென்றுவிட்டோம். என்னிடம் காட்டப்படும் மூன்று குச்சிகள் தான்

எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட குச்சிகள் ஆகும். சுமார் 2.50 அடி நீளமுள்ள புங்கை மரக்குச்சிகள் மூன்று மாத்திரம் (சுமார் 76 செ.மீ. நீளமுள்ளது). அது **சா.பொ.1–**ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 15.10.2025 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.15 17:33:51 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
15.10.2025